ISSN : 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

==================================================================

# பெண் எழுத்துகளில் (புறநானூறு -235, செங்கேணி) மரணப் பதிவு மொழியமைப்பு ஒப்பீட்டாய்வில் ஆண் தலைமைப் பண்பு மதிப்பீடுகள்

==================================================================

***கட்டுரையாளர்***
***முனைவர் சு. சிவசந்திரகுமார்***
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை,*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),*
*திருப்பத்தூர் - 635 601.*
==================================================================

**ஆய்வுச்சுருக்கம்**

*ஒப்பீட்டாய்வு அடிப்படையில் புறநானூறு - 235 ஆம் பாடல், செங்கேணி புதினம் ஆகியன ஆண் தலைமையை இறப்பிற்குப் பின் மதிப்பீடு செய்யும் விதம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இப்பெண்ணெழுத்துகள் ஆண் தலைமைத்துவத்திடம் எதிர்நோக்கும் தலைமைத்துவ வகைமாதிரிகள் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. மானிடவியல் அடிப்படையில் பெண்கள் சடங்கியல், ஒழுக்கநெறி ஆகிய தளங்களில் ஆணாதிக்கத்திற்கு எதிராக ஓங்கி நிற்கின்றரெனும் கருத்து, இலக்கியவியல் பார்வையில் மாற்றம் பெறுகின்றது. ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட பெண்ணெழுத்துகள் சடங்கியல் பேசவில்லை. ஒழுக்கநெறிகளில் சமூக மதிப்புகளுக்கு ஏற்றமைந்து பாட்டமைத்துள்ளனர். அதனையே இன்றும் எதிர்நோக்கியுள்ளனர்.*

***குறிச் சொற்கள் (key words) :*** *புறநானூறு -235, செங்கேணி புதினம், அகநிலை (Subjective), புறநிலை (Objective), அறிவு ஆற்றல் (Intelligent Quotient), திட்டவரைப்படம் (Blueprint)*

*முன்னுரை*

***தலைமைப் பண்பை இயற்கையிலிருந்து மனிதச் சமூகம் உருவாக்கியுள்ளது. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளான கைசன் (Kaizen), எம்பிஓ (MBO), பெர்ட்(Pret), சிபிஎம் (CPM)), 6 சிக்மா ( Core Competence 6- Sigma) மற்றும் ஸ்வாட் (SWOT) இவை அனைத்தும் இயற்கையில் செயல்படுகின்றன என்பதனைத் தற்கால ஆய்வு முடிவுகள் அறிவித்து அமைகின்றன (2010 ப. அறிமுகம் Xiii). உயிரினங்களில் சில பெண் தலைமையை***

***அடிப்படையாகக் கொண்டவை. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தொல்லியல் எச்சமாக ஆதிச்சநல்லூர் தாய்த் தெய்வ வழிபாடு காணப்படுகிறது. நாட்டார் வழக்காறு சார்ந்து அல்லி அரசாணிமாலை போன்ற தரவுகள் தாய்த் தலைமை சார்ந்து காணப்படுகின்றன. தமிழ் இலக்கியச் சான்றுகளில் 'தாய் தருவதே பழவிறல் தாயம்' (புறம்75:1,2), 'மூதின்முல்லைத் துறை' போன்றவை தாய்த் தலைமையின் எச்சத்திற்கான சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன என்பார் நா. செல்வராசு (1998. ப.103) இவையாவும் எச்சங்களே. இலக்கியத் தரவுகள் அடிப்படையில் பார்க்கின்ற போது ஆண்தலைமையே அடிப்படையாகக் கொண்டிருப்பது புலனாகிறது. அதனைப் பெண்பாற் புலவர்கள் சிறப்பித்துப் பாடியமைக் காரணமாக உலகச் செவ்வியல் இலக்கியங்களில் தமிழ்த் தனித்தன்மையைப் பெற்றுள்ளது.. செவ்வியல் இலக்கியங்களில் கி.மு. 490 – கி.பி.2ஆம் நூற்றாண்டு கால வரையறை கொண்ட சங்க இலக்கியங்களும் அடங்கும். சங்கப் புலவர்களின் எண்ணிக்கை 473. பெண்பாற் புலவர்கள் 40. இத்தொகையே சமமின்மையைக் காட்டுகின்றதெனக் கருதும் ஆய்வாளர்களுக்கு இக்கட்டுரைத் தொகையாக்கத்தை நினைவூட்டுகிறது. தொகுப்புக் கால அரசியல் மாற்றங்கள் பெண்புலவர்களின்*** *பாடல்களைத் தவிர்த்திருக்கலாம். நாற்பது பெண்பாற்புலவர்களின் செழுமையை அடியொற்றியே தமிழ்ச் சமூகம் வளர்ந்திருக்கிறது என்பதைச் சொல்வதற்கு அதனுள் ஏற்பட்ட சில தலைமை மாற்ற போக்குகள் ஏற்ற முடிவுகளை நமக்குத் தரவில்லை. ஒரே சமூகக் கட்டமைப்பிலான தலைமையின் கீழ்த் தமிழகமும் இருந்திருக்கவில்லை. களப்பிரர், பல்லவர், விஜயநகரப் பேரரசு, நாயக்கர், சுல்தானியர், ஆங்கிலேயர் எனப் பல்வேறுபட்ட தலைமையின் கீழ்த் தமிழகம் அமைந்திருந்தது. இந்நிலையில் தலைமைத்துவத்தை மதிப்பீடு செய்து அதனை அங்கீகரிப்பவர்களாக அல்லது எதிர்ப்பவர்களாகப் புலவர்கள் இருந்திருக்கின்றனர். பெண்கொலை புரிந்த நன்னனைப் புலவர்கள் /படைப்பாளிகள் பாட்டுடைத் தலைவனாகப் பாட மறுத்திருக்கின்றனர். பாட்டுடைத் தலைவன் என்பது தலைமைத்துவத்திற்கான வெகுமதி என்பதாகக் கொள்ளலாம். பெண்கள் குறித்து மானுடவியல் , இனவரைவியல் தரும் கருத்துகளைச் சரிப் பார்க்கும் போது "சமூகத்தில் பொது வாழ்வுத் தளத்தில் (Public domain) ஓங்கி நிற்கும் ஆணாதிக்கம் சடங்கியல், ஒழுக்கநெறி ஆகிய தளங்களில் தலைகீழ் மாற்றத்தைப் பெறுகிறது" (1998. ப. 131) என்னும் மானுடவியல் குறிப்புகளுக்கு இக்கட்டுரை மறுபரிசீலினை தேடுகின்றது. புறம் -235, செங்கேணி புதினம் ஆகியவற்றினை ஆண் தலைமைப் பண்பு மதிப்பீடுகளை அகநிலை, புறநிலை சார்ந்து காணும் போது இலக்கியக் தரவுகள் அல்லது முடிவுகள் வேறுகோணத்தில் காணப்படுகின்றதெனும் கருதுகோளைத் தகுந்த சான்றுகளுடன் மெய்பிப்பதையே இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

*தலைமைப் பண்பு மதிப்பீடுகள்*

***மதிப்புகள் தற்சார்புக் கூறுகளையும் புறச்சார்புக் கூறுகளையும் (Both subjective and objective elements) அடிப்படையாகக் கொண்டுள்ளன. (2016, ப. 19) 'சமூகமதிப்புகள் அச்சமூகத்தின் குறிக்கோள் சிந்தனைகளையும், ஒழுகலாறுகளையும் சுட்டிநிற்பதால், அவை சமூக வாழ்வின் ஒழுகலாறுகள் பற்றிய ஒரு திட்டவரைப்படமாகச் (Blueprint) செயற்படுகின்றன'. (2016, ப.29). இத்திட்டவரைப்படத்தில் பெண்ணெழுத்துகள் ஆண் தலைமைத்துவப் பண்புகளை மதிப்பீடு செய்யும் விதம் அலாதியானது. பெண்ணெழுத்துகள் ஆண் சமூகத் திட்டவரைப்படத்தின் மாதிரிகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இக்கூற்றிற்குச் சான்றாகச் சங்கக் கவிதைப் புறம்-235 ஆம் பாடல் மரபுசார்ந்த பெண்ணெழுத்தாகவும் நடப்புச் சார்ந்த பெண்ணெழுத்துப் பதிவாகச் செங்கேணிப் புதினமும் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இரண்டு படைப்பாளிகளும் தங்கள் படைப்பிற்குள் மரணத்திற்குப் பின்னதாக ஆணின் தலைமைத்துவப் பண்புகளை மதிப்பீடு செய்து படைப்புகளைப் படைத்துள்ளனர். புறம்-235, செங்கேணி மரணப் பதிவுடைய ஆணைத்(Male) தந்தையாக ஏற்றுக் கொண்டுள்ளது. ஆண்தலைமைத்துவப் பண்பு மாதிரிகளை மரணத்திற்குப் பின் மதிப்பீடு செய்துள்ள இப்பெண்ணெழுத்துகள் ஒப்பு நோக்கத்தக்கன. இப்படைப்பாளிகள் பின்வரும் இருநிலைகளையும் பயன்படுத்தியுள்ளனர். அவை, முறையே***

***1) அகநிலை அணுகுமுறை: வடிவம் + உள்ளடக்கத் தேடலோடு படைப்புகளை அணுகுபவர்கள்.***

***2) புறநிலை அணுகுமுறை: புறநிலையாளர்கள் சமூகமயப்படுத்த அமைப்பாகவும் இயக்கமாகவும் இயங்குதல், சமூகமயமாதலும் இயக்க பண்பும் படைப்பாளியின் மேல் உண்டாகும் எதிர்வினையில் படைப்புகளைப் பாதிக்கும் விதமாகவும் ( 2007, ப. 42) அமைந்துள்ளன.***

*புறநானூறு – 235*

*ஆசிரியர் : ஔவையார் . கி.மு. 490 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரை. இதனுள் 11 வாக்கியங்கள் (எளிய, கலவை, கூட்டு வாக்கியங்கள் உள்ளன.) சங்க இலக்கிய அகப்பாடல்கள் தற்சார்புக் (subjective) கூறுகளையும் புறப்பாடல்கள் புறச்சார்புக் (objective) கூறுகளையும் கொண்டுள்ளன. 'ஔவையார் பெண்பாற் புலவராய் இருந்தும் அகப்பாடல்களை விடப்(26) புறப்பாடல்களை(33) அதாவது கிட்டத்தட்ட ஒன்றரை மடங்கு பாடியிருப்பதிலிருந்து புற உலக வாழ்க்கைக்கு அவர் கொடுத்த முக்கியத்துவம் புலனாவதாகக் கொள்ளலாம்.' (2013, ப.13) மதிப்பீடுகள் வாழ்க்கையிலும் வாழ்க்கைக்குப் பின்னரும் பங்காற்றுகின்றன. மனிதர்களின் சமூக மதிப்பு மாறுவது போல அவர்களின் பண்புகள் மாறுபடுவதையும் ஔவையார் உணர்ந்து பாடியுள்ளார். அந்தவகையில் அதியமான் நெடுமானஞ்சியினை அவன் வாழும் காலத்தில் புகழ்ந்து (புறம். 91, 313, 315) பாடி அவனது வாழ்க்கைக்குப் பின் இறப்பின் போது(புறம். 235) அவனுடைய*

*பண்புநலன்களைக் குறிப்பிட்டு அதியமான் நெடுமானஞ்சியின் பண்பு நலன்களைப் பட்டியலிட்டுப் பாடியுள்ளார். இதே பண்புகளை நல்லியக் கோடனைப் பாடிய இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் வரிசைப்படுத்தியுள்ளார். இவ்வரிசைமுறைத் திருக்குறளில் அதிகாரங்களாக அமைந்துள்ளன. இவையாவும் ஆண்புலவர்களாலும் தத்துவவாதிகளாலும் அக்காலத்தில் நிலவிய அல்லது நிலவ வேண்டிய சமூகத்தின் தலைமைப் பண்புகளின் அடிப்படைகளாக அமைந்துள்ளன. அவற்றின் ஒப்பீட்டைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.*

| **வ.எண்** | **அதிகாரம்** | **திருக்குறள்** | **சிறுபாணாற்றுப்படை** | **மேலாண்மை(Nodding.J,2019)** |
|---|---|---|---|---|
| *1* | *08* | *அன்புடமை* | இன்முகம் உடைமை | *Compassion* |
| *2* | *09* | **விருந்தோம்பல்** | கொடுத்தல் | *Hospitality* |
| *3* | *10* | **இனியவை கூறல்** | இனியன் ஆதல் | *Pleasant words* |
| *4* | *11* | **செந்நன்றி அறிதல்** | செந்நன்றி அறிதல் | *Gratitude* |
| *5* | *12* | **நடுவு நிலைமை** | ஒருவழிப்படாமை | *Unbiased* |
| *6* | *25* | ***அருளுடைமை*** | *அஞ்சினார் அளித்தல்* | *Grace* |
| *7* | *31* | **வெகுளாமை** | வெஞ்சினம் இன்மை | *Self Mastry* |
| *8* | *43* | ***அறிவுடமை*** | *அறிவு நன்குடைமை* | *Showcas intilence* |
| *9* | *46* | **சிற்றினம் சேராமை** | சிற்றினம் இன்மை | *Avoiding mean associations* |
| *10* | *48* | **வலியறிதல்** | ஆண் அணி புகுதல் | *Knowledge of power* |
| *11* | *53* | **சுற்றந்தழால்** | காமுறப் படுதல் | *Cherishing Kinsmen* |
| *12* | *57* | **வெருவந்த செய்யாமை** | *அழிபடை தாங்கல்* | *Fear Motivation* |
| *13* | *58* | **கண்ணோட்டம்** | ஓடியது உணர்தல் | *Empathy* |
| *14* | *67* | **வினைத் திட்பம்** | கருதியது முடித்தல் | *Goal Achiever* |
| *15* | *76* | **பொருள் செயல்வகை** | வரிசையறிதல் | *Ablitity to delication* |
| *16* | *91* | **பண்புடைமை** | *அறிவு மடம் படுதல்* | *Down-To-Earthness* |

*அ) இன்முகம் உடைமை (Genial Countenance): புறம் 235ஆம் பாடலின் முதலடியே " சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே" அதியமான் நெடுமானஞ்சியின் பண்பு நலன்களில் இன்முகம் உடைமையை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. ஆண் தலைமைத்துவத்தின் இப்பண்பு பெண்களால் பெரிது மதிக்கப்பட்டிருக்கின்றது என்ற அடிப்படையில் ஔவையாரால் இப்பண்பு முதன்மையாக நிரல்படுத்தப்பட்டுள்ளது.*

***ஆ) கொடுத்தல் (Hospitality) & சுற்றந்தழால் (Cherishing Kinsmen): பாடலின் 2 ஆவது கலவை வாக்கியம். – 2வது அடி (2-3-வது அடிகள்) நியதி தொகை + கலவை வாக்கியம். "பெரியகட் பெறினே யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே" இரண்டு அடியாக (2, 3) இருந்தாலும் வினையைப் பெற்றுக் கிளவியாக (Clause) - இருப்பதாலும் ஒலிநய – வண்ண வேறுபாடு கொண்டிருப்பதாலும் இரண்டு அடிகளாக அமைக்கப்பட்டிருக்கலாம் என்பார் சண்முகம்.***

***(2013,ப.45). ஆனால், தலைமைப் பண்புகளான கொடுத்தல், சுற்றந்தழால் பண்புகளை வலிமையாக்குதற் நோக்கம் பொருட்டே அவ்வாறு அமைக்கப்பட்டுள்ள தென்பதாகக் கருதலாம்.***

*இ) **அருளுடைமை** (Grace) & ஒருவழிப்படாமை **(Unbiased)**: "சிறுசோற்றானு நனிபல கலத்தன் மன்னே பெருஞ் சோற்றானு நனிபல கலத்தன் மன்னே" என்னும் அடிகளில் **அருளுடைமை**, ஒருவழிப்படாமை என்னும் தலைமைப் பண்புகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அன்பு என்பது தொடர்புடையார் மாட்டு நிகழ்வது; அருள் யாவர் மாட்டும் நிகழ்வது **"**சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே" என்னும் முதலடியில் வெளித்தோன்றும் அன்புடைமை அதியமான் நெடுனானஞ்சிக்கு ஔவையாரைத் தெரியும் என்ற அடிப்படையில் நிகழ்வதாகும். சிறுசோற்றானு நனிபல கலத்தன் மன்னே எனும் இவ்விடத்து யாவர் மாட்டு என்பது இல்லாமயுள்ளது.எனவே உரைகாரரும் சோறு எல்லார்க்கும் பொதுவாதலால் சிற்றளவினையுடைய சோற்றின் கண்ணும் மிகப்பல கலத்தோடுங்கூட உண்பன் என்று உரை செய்திருப்பார்.(2008 ப.101) இவ்அருளுடைமைக்கு ஒரு வழிப்படாமைப் பண்பு உதவியுள்ளமை ஔவையார் பாடலால் அறிய கிடைக்கிறது.*

*ஈ) அழிபடை தாங்கல் **(Fear Motivation)** & கொடுத்தல் **(Hospitality):** "**என்பொடு துடிபடு வழியெல்லா மெமக்கீயு மன்னே அம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே** " எனும் 6, 7 அடிகளில் ஒரே சொல் (வழியெல்லாம்) 3 மற்றும் 4 வது சீர்கள் மூவசை பெற்றிருப்பதும் அந்தச் சொல் அழுத்தம் பெறுகிறது. அஞ்சியின் பாதுகாப்பு வளையத்தின் திறனை வெளிப்படுத்துகிறதென்பார் சண்முகம் (மேலது ப. 48). அவ்அழுத்தம், அகத்தூண்டல் **(Inspiration)** சிந்தனையை மாற்றுகின்றது. புறத்தூண்டல் **(Motivation)** செய்கையை மாற்றுகின்றது என்பதைக் குறித்ததானது. ஔவையார் அதியமான் நெடுமானஞ்சி குறித்து சொல்லும் போது அவனுடைய போர்க்களத்திற்கே சென்று பாடல் புனையும் வல்லாண்மை பெற்றிருப்பினும் 'எம்முளும் உளன்ஒரு பொருநன்' (புறம். 87)என்ற நிலையிலான ஒரு தந்தையின் பாதுகாப்புத் தற்போது இல்லை என்னும் போது மிக வருந்தி தன்னுடைய நிலைக்கு வருந்துதல் மட்டுமல்லாது தந்தைக் காப்பு என்பது அதியமான் நெடுமானஞ்சியின் தலைமைத்துவத்தில் இருந்திருக்கின்றது என்பதையும் பதிவுசெய்கின்றார்.*

*உ) அறிவு மடம்படுதல் **(Down-To-Earthness) :** "நரந்த நாறுந் தன்கையாற் புலவு நாறு மென்றலை தைவரு மன்னே" 8, 9 – ஆவது அடிகள் சேர்ந்து ஒர் எளிய வாக்கியமாக அமைந்துள்ளது. ஒத்தறிவான் உயிர் வாழ்வான் (குறள் 214), அறிவினால் ஆகுவது உண்டோ (குறள் 315) என்னும் வள்ளுவரின் மேலாண்மைத் தலைமைத் தத்துவங்களுக்கு முன்னோடியாக அமைந்திருப்பதைக் காணலாம். அறிவு ஆற்றலை **(Intelligent Quotient)** விட உணர்ச்சி ஆற்றல் **(Emotional Quotient)** ஒரு தலைவனுக்கு இன்றியமையாதது என்பதை உணர்த்திச் செல்லும் வரிகள் 8, 9 ஆவது அடிகளாக அமைந்துள்ளன.*

இங்கு மரணத்தின் பின்னதான மதிப்பீடுகள் அந்தந்தக் காலச் சமூகத்தின் வளர்ச்சி, மாற்றத்தை அளந்து காட்டும் அளவீடுகளாக அமைந்து விடுகின்றன. "ஆசாகெந்தை யாண்டுளன் கொல்லோ பற்றுக்கோடாக இருக்கிற என் தந்தை அஞ்சி எங்கு இருக்கிறானோ? அடி 16 என்று வினவுவதன் மூலம் ஔவையார் மிதவாதப் பெண்ணியப் பிரதிநிதி என்பதாக எண்ணுவது கூடாது. அதியமான் நெடுமானஞ்சியை நோக்கித் "தன் அறியலன் கொல் என் அறியலன் கொல்" எனப் புறம். 206 பாடலில் வினவும் போது தீவிரவாதப் பெண்ணியத்தின் திருந்திய வடிவமாகக் கொள்ளலாம். ஆயின் புறநிலை அணுகுமுறையில் தந்தை போன்றவனை ஆதரிக்கும் பாங்கு அலாதியானது. கணவன் அல்லது குடும்பச் சூழல் குறித்து ஔவையிடம் அணுக அகப்பாடல்களுக்குத்தான் சென்று சேர வேண்டும். புறநிலை அணுகுமுறையில் ஔவையார் அதியமானைத் தந்தையாக ஏற்றுக் கொள்வதென்பது அச்சமூகத்தின் பார்வை மற்ற பெண்பாற்புலவர் பாடல்களையும் அப்படி ஏற்றுக் கொள்ள வேண்டுமா என எதிர்கேள்வி எழுப்புவோருக்கு இக்கட்டுரை ஔவையாரின் அறிவு ஆற்றலைக் ***(Intelligent Quotient)*** கணக்கில் கொண்டு காண வேண்டுமென வலியுறுத்துகின்றது. அதியமானை மிகக் கடுமையாக விமர்சித்த புலவராகத்தான் ஔவையாரைக் கொள்ள வேண்டும். எத்திசை செலினும் அத்திசை சோறே என்னும் அடிகளுக்குத் தமிழர்கள் மரபுசார்ச் சொத்துரிமை வாங்கினாலும் தவறேதுமில்லை. அந்தளவிற்கு ஆழமான நுண்மாண் நுழைபுலம் கொண்ட பெண் அதியமான் நெடுமானஞ்சியை அதே புறத்தில் (புறம்.206)கடுந்தேர் புரவி நெடுமானஞ்சிக்கு வள்ளியோர் செவி முதல் வயங்கு மொழி வித்தியாகிய தன்னைத் தெரியாதாயெனக் கடுமையாக எதிர்த்துள்ளார். அதியமான் நெடுமானஞ்சி இறந்த போது எங்கு இருக்கிறானோ என்று புறநிலை அணுகுமுறையில் வினவுகின்றாள். அகநிலையில் தலைவி கூற்றில் "**முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்**" (குறுந்தொகை, 28) என்று படைத்திருப்பதின் மூலம் சமூகத்தின் குறிக்கோள் சிந்தனைகளையும், ஒழுகலாறுகளையும் உள்வாங்கியதான படைப்பினைப் படைத்துள்ளார். இவ்விடத்தில் பெண் அறம் என்பது பாலியலை ஒட்டியதாகவும் (அருள், இன்பக் கொள்கை), ஆண் அறம் சமூகத்தை ஒட்டியதாகவும் (பொருள், எதார்த்தக் கொள்கை) அமைந்துள்ளது என்னும் கருத்துடன் ஒன்றிச் செல்வதைக் காணமுடியும்(2019. ப.138)

செங்கேணி புதினம்

ஆசிரியர் :அமிர்தவள்ளி , புதுச்சேரி வட்டார பரதவ மக்களின் வாழ்வியலை, அவர்களின் வட்டார மொழியிலே பேசும் இனவரைவியல் புதினம் செங்கேணி. 240 பக்கங்கள். நவம்பர். 2021. புதினத்தின் மையப்பாத்திரம் செங்கேணி. செங்கேணியின் திருமணம் குறித்த முடிவுகளைச் செங்கேணியின் அக்கா கணவர் புள்ளசாவடியாரே எடுக்கிறார். அக்குடும்பத்தின் அனைத்து முடிவுகளும் அவரால் எடுக்கப்பட்டதே. புதினத்தில் இடம்பெறும் காவ்யா புள்ளசாவடியாரின் மகள். காவ்யாவின் கூற்றில் கதை நகர்த்திச்

*செல்லப்படுகிறது. நான்கு விதமான மரணப் பதிவுகள் புதினத்தில் இடம்பெற்றுள்ளன. 1) நாய் கடித்து இறந்து போகும் எட்டுவயது பெண் 2) ஓர் இளைஞனின் விபத்து மரணம் 3) வயதாகிய ஒருவரின் தற்கொலை 4) வயதாகிய புள்ளசாவடியாரின் இயற்கை மரணம் ஆகியன. படைப்பினுள் ஆங்காங்கே பதிவுபெறும் புள்ளசாவடியாரின் பண்புகள் தலைமைத்துவத்திற்கு எதிர்திசையில் செல்கின்றன. குறிப்பாகத் தலைமைத்துவத்திற்குக் கூடாத பண்புகள் தென்படுகின்றன.*

*1) வெஞ்சினம் இன்மை **(Self Mastry) :** தலைவனுக்கு வேண்டிய வெஞ்சினமின்மைச் சிறிதும் இல்லாமல் காணப்படுகிறார் "கோவம் வந்துட்டா மனுசன் இல்ல. பொண்டாட்டி புள்ள மச்சினிமார் எல்லாரையும் மாட்ட அடிக்கிற மாதிரிதான் அடிக்கிறான்." ( 2021, ப. 123.)*

*2) **கருதியது முடித்தல் (Goal Achiever) :** " மூத்த மருமவன் , அக்கா வீட்டுக்காரன். அப்பன் இல்லாத உங்களுக்கெல்லாம் ஒழச்சி போடறவன் , மாமனுக்கு மாமன் மட்டும் இல்ல அப்பனுக்கு அப்பன். உங்கள தண்டிக்கிற உரிமையும் கண்டிக்கிற உரிமையும் என் தம்பி புள்ளசாவடியானுக்குத் தான் இருக்குது (மேலது. ப. 216) எடுத்துக் கொண்ட இலக்கை அடைய முடியாத ஆளுமையாகத் தான் புள்ளசாவடியார் இருக்கின்றார். இஃது இலக்கை அடையமுடியாத ஆளுமை. இருப்பினும் அவரின் இறப்பைக் குறித்து காவ்யா கூறும் போது, " இவரால் தனக்கு எந்தத் தொல்லையும் இல்லை. அவஸ்தைப்படுவது அம்மா தான். அவளுக்கே சலிப்பில்லை எனும்போது இவர் இன்னும் கொஞ்ச காலம் இருந்தா என்னனு தோன்றியது (2021, ப. 234) என்பதாகக் குறிப்பிடுவார். இந்நாவலில் இடம்பெறும் காவ்யா பல்கலைக்கழகத்தில் முனைவர்பட்டம் பெற்றவர். புள்ளசாவடியார் அந்தக் குடும்பத்தின் அனைத்து முடிவுகளையும் எடுத்துள்ளார். செங்கேணியின் திருமண முடிவும் அவர் முன்மொழிந்ததே இருப்பினும் செங்கேணியின் வாழ்க்கை மகிழ்விற்குரியதாக இல்லை. அதனால், செங்கேணி குடும்ப உறுப்பினர்களால் விலக்கம் பெறுகிறார். மீண்டும் புள்ளசாவடியாரின் இறப்பிற்கு வரும் செங்கேணியினை மிக மோசமாகக் குடும்ப உறவுகள் அலட்சியப்படுத்தும் போது காவ்யாவிற்குச் "செங்கேணியைத் தடுத்து நிறுத்த வேண்டும் போலிருந்தது. அவளுடைய இரண்டு கைகளையும் பிடித்து நிறுத்திப் பற்றிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. நெஞ்சம் படபடத்தது. இதயம் வேகமாகத் துடித்தது. எவ்வளவோ விரைந்து செல்ல முயற்சித்த போதும் கால்கள் ஓரிடத்திலேயே அசையாமல் மரத்து போயிருந்தன. குறைந்தபட்சம் 'தொத்தா' என்றாவது கூப்பிட்டுவிட வேண்டும் என்று முயற்சி செய்தாள். தொண்டை அடைத்தது, வார்த்தை வரவில்லை. மூர்ச்சையாகினாள் (2021, ப. 239.) என்பதாக அகநிலை அணுகுமுறையில் தன் இயலாமையைப் புதினத்தில் படைத்துக் காட்டியுள்ளார். புறநிலையில் தன்குடும்ப உறுப்பினர்களால் சமூகத்தினரால் மறுக்கப்பட்ட பெண்ணை மிகத் துணிச்சலுடன் புதினத்தின் தலைமை மாந்தராக்கியுள்ளார். செங்கேணி புதினத்தில் முடிவெடுக்கும் திறன் **(Decission Making)** ஆண் சார்ந்து இருக்கும் போது பெண்ணால் வெற்றி பெற முடியவில்லை.*

அதே வேளைவில் பெண் எடுத்த முடிவு தவறுதலாக இருந்தாலும் தோல்வியைத் தழுவினாலும் அதை எதிர்க்கொள்ளும் தைரியத்தையும் மனத்திட்பத்தையும் அவளின் முடிவெடுக்கும் பண்பு அதனை அனுபவமாக வழங்கிவிடுகின்றது என்பதைத் தான் புதினத்தின் புறநிலை அணுகுமுறையில் 240 பக்கங்கள் உறுதி செய்கின்றன. குறிக்கோள் சார்ந்து பயணிக்கும் உயர்நோக்குச் சமூகம் முடிவெடுக்கும் திறனைப் பெண் / ஆண் இருபாலருக்கும் பொதுவில் வைக்க வேண்டுமென்பதே செங்கேணியின் கோரிக்கையாக உள்ளது. இக்கோரிக்கை "மிகத் தொன்மையான ,தனி உடைமைகள் நிலைக்காது என்று கூறிய குரலாகும் இதுவே இன்பக்கொள்கை சார்ந்த பெண்ணின் குரலாகும்" என்பார் ராஜ்கௌதமன்(2019,ப. 143) இக்குரல் இன்றும் ஒலிப்பதைச் செங்கேணி உறுதிசெய்கிறாள்.

**ஆண் தலைமைப் பண்பை மதிப்பிடும் பெண்ணெழுத்துகள்**

புறநானூறு -235, செங்கேணி இருவரும் தன்னுடைய தந்தையர்கள் வேண்டும் என்பதில் ஒன்றுபடுகின்றனர். ஆண் எழுத்தாளர்கள் மேலைப் பெண்ணியவாதிகளின் எழுத்துகளில் வரையறை செய்யும் வகைமாதிரிகள் 11 ஆகும். (2011, ப.48) அவை 'உருவமற்றவை, அடக்கமானவை, ஒருநிலையில் நில்லாதவை, செறிப்பில் கிடப்பவை, அர்ப்பணிப்பானவை, பொருள் சார்ந்தவை, ஆன்மீகம் சார்ந்தவை, பகுத்தறிவு சாராதவை, ஒத்துப்போகிறவை, இறுதியாகச் சண்டைக்காரிகள், சூனியக்காரிகள்' என்னும் வகைமாதிரிகளுக்கு (stereotypes) எதிரானவையாகப் புறம் – 235, செங்கேணி காணப்படுகின்றது.. ஔவையார், அமிர்தவள்ளி ஆண்தலைமைத்துவப் பண்பு மாதிரிகளை மரணத்திற்குப் பின் மதிப்பீடு செய்வதில் வேறுபடுகின்றனர். இதனுள் அதியமான் நெடுமானஞ்சி இனக்குழுத் தலைவர், புள்ளசாவடியார் அக்குடும்பத்தின் அனைத்து முடிவுகளையும் எடுத்ததன் அடிப்படையில் குழுத்தலைவன் என்பதாகக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் ஒப்புநோக்கதக்கவர்கள். ஔவையார் பாண் மரபாளர் என்பதும் அமிர்தவள்ளி இனவரைவியல் புதினம் வரைந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 11 வாக்கியங்களில் மிக உயர்ந்த தலைமைத்துவப் பண்புகள் ஏழுக்கும் மேல் பெற்ற அதியமான் நெடுமானஞ்சியினை ஔவையார் தேடுகிறார். 240 பக்கங்களினுள் வருமிடங்களில் எல்லாம் தலைமைக்கான சிறிய அடையாளமுமின்றி குடும்பம்/குழுவின் தலைவனாகத் திகழும் புள்ளசாவடியார் உயிரோடு இருந்திருந்தாலும் நல்லது என்று காவ்யா சொல்வதைத் "தமிழ்ப் பெண்ணியம்" என்பதாகத் தான் வரையறுக்க இயலும். இவ்விடத்தில் காலத்தைக் கணக்கில் கொள்ள வேண்டும். இரண்டு படைப்பாளர்களும் மிகக் கூர்ந்த அறிவுடையோர் எனினும் முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல் என்றும் தொண்டை அடைத்தது, வார்த்தை வரவில்லை, மூர்ச்சையாகினாள் என்னும் போதும் அகநிலை அணுகுமுறையில் 'சமூக மதிப்புகள் அச்சமூகத்தின் குறிக்கோள் சிந்தனைகளையும் ஒழுகலாறுகளையும் சுட்டி நிற்பதால், அவை சமூக வாழ்வின் ஒழுகலாறுகளை உள்வாங்கிப் படைப்புகளைப் படைத்துள்ளனர் என்பது

*தெரியவருகின்றது. "ஒட்டுமொத்தமாகத் தமிழ்ச் சமூகத்தை ஆண் ஆதிக்கச் சமூகம் என்று அடையாளப்படுத்துவது தமிழ்ப் பண்பாட்டின் முழுமைக்குள் (Whole) ஒருங்கிணைத்துள்ள உள்தளங்களின் இயங்கியலை நுணுகிப் பார்க்கக் கூடிய பார்வையை இழப்பதாகும்" என்பார் பக்தவத்சல பாரதி (1998. ப. 130). இவ்வியங்கியலைத் தலைமைப் பண்பு மதிப்பீட்டு அடிப்படையில் அணுகும் போது செங்கேணி புதினத்தைப் பொறுத்தவரையில் பெண் எதிர்நோக்கும் தலைமைத்துவம் பெண்ணுக்கான முடிவினைப் பெண்ணெடுப்பதைக் கேள்விக்கு மட்டுமல்ல கேலிக்கும் உட்படுத்தாதத் தலைமைத்துவ மாதிரிகளை (Leadership Models) எதிர்ப்பார்த்துள்ளார் என்பது அறிய கிடைக்கின்றது. ஔவையார் செங்கேணி புதினம் எதிர்நோக்கும் தலைமைத்துவத்தின் மாதிரிக் கூறுகளை எடுத்து நிரல்படுத்தியுள்ளார் என்பது தெரிய வருகின்றது. இவ்விடத்தில் 'எத்தனை பெண் எழுத்தாளர்கள் இருக்கிறார்கள், எத்தனை பெண் எழுத்தாளர்கள் பரிசு பெறுகிறார்கள் என்பதல்ல பிரச்சினை; இலக்கியத்தில் மனிதநேயத்தை எப்படி வரையறுப்பது என்பது தான் கண்முன்னே இருக்கும் சாவல்' (2022.ப.17) என்னும் டாங் ஃபெய், (சீன அறிவியல் புனைகதை, இலக்கிய விமசகர்) கூற்று ஒப்புநோக்கத்தக்கது. புள்ளசாவடியாரிடம் விடுபட்டுள்ள தலைமைப் பண்புகள் ஆதித் தலைமையில் அதியமானிடம் காணப்பட்ட அரிய வகைத் தலைமைப் பண்புகளேயாகும். இதற்கான கால இடையீடு இரண்டாயிரம் கணக்கில் கொள்ளப் பெற வேண்டும்.*

***நிறைவுரை**:*

*புறநிலையில் ஆண்களின் ஆணாதிக்க மனோபாவத்தை எந்தவித அச்சப்பாடுகளுமின்றிக் கேள்வியெழுப்பும் தமிழ்ப் பெண்ணிய நோக்கிலான பெண்ணெழுத்துகள் அகநிலையில் சமூகம் குறித்ததான ஒரு திட்டவரைப்படத்தை மனதில் இறுத்திக் கொண்டு செயல்படுவது போல் அமைந்துள்ளன. இதற்கு, இன்முகம் உடைமை (Genial Countenance), கொடுத்தல் (Hospitality), சுற்றந்தழால் (Cherishing Kinsmen), வரிசையறிதல் (Ability to delication) , ஒருவழிப்படாமை (Unbiased), அருளுடைமை (Grace) , அழிபடை தாங்கல் (Fear Motivation), அறிவு மடம்படுதல் (Down-To-Earthness) போன்ற தலைமைப் பண்புகள் துணை செய்துள்ளன. இப்பண்புகளை உள்ளடக்கிய ஆண் தலைமைத்துவ மாதிரிகளையே கி. மு. 490 முதல் கி.பி. 21 ஆம் நூற்றாண்டு வரையிலான பெண்ணெழுத்துகள் அங்கீகரித்துள்ளன. இத்தகைய தலைமைத்துவ மாதிரிக் கூறுகளை இதரப் பெண்ணியக் கோட்பாடுகள் கணக்கில் கொண்டுள்ளனவா என்பது மேலாய்விற்குரியது.*

***ஆய்விற்கு உதவியன***

***1. அமிர்தவள்ளி, செங்கேணி, முரண்களரி படைப்பகம், சென்னை. 2021.***

***2. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, செவ்விலக்கியக் கருவூலம்-14, புறநானூறு- 2,தமிழ்மண் அறக்கட்டளை,சென்னை,2008.***

*3. கல்யாண் சாகர் நிப்பாணி, ஆர். ராஜகோபாலன்(தமிழில்), 7வதுஅறிவு, விவாபுக்ஸ், புதுதில்லி, 2010.*

*4. சண்முகம். செ.வை, கவிதைக் கட்டமைப்பு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். 2003.*

*5.சாரா காம்பிள்- டோரியல் மோய், ராஜ்கௌதமன் (தமிழில்),பெண்ணியம் வரலாறும் கோட்பாடுகளும் ,விடியல் பதிப்பகம்,கோவை, 2011.*

*6. சேதுமணி மணியன், மதிப்பாய்வு ஒரு வழிகாட்டி., செண்பகம் வெளியீடு, மதுரை, 2016.*

*7. பக்தவத்சல பாரதி, இரா. சம்பத் (பதி) பெண்ணிய ஆய்வுகள், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி, 1998.*

*8. மாலதி மைத்ரி(பதி), வெளி,டாங் ஃபெய் உடன் நேர்காணல்(தமிழில் மு.வி.நந்தினி), அணங்கு பெண்ணியப் பதிப்பகம், புதுச்சேரி. சனவரி .2022.*

*9. ராஜ் கௌதமன், தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு (சங்க காலம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2019.*

*10. வெண்ணிலா.அ, பெண் எழுதும் காலம், அகநி வெளியீடு, வந்தவாசி, 2007.*

*11. Nodding, J. (2019). Discover These Leadership Styles of Famous Leaders. liquidlearning.com.*